# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை – 02

**வரலாறு**

**க.பொ.த. சாதாரணதரம் 2024 (2023)**

### பகுதி - 1

1. இலங்கையின் மிகப்பழைமை வாய்ந்த உள்நாட்டு இலக்கிய மூலாதாரம்

(1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) சூளவம்சம் (4) தாதுவம்சம்

2. இலங்கையின் பௌத்த சாசனம் பற்றி அறிய உதவுகின்ற நூல்

(1) பூஜாவலிய (2) நிகாய சங்கிராய (3) சத்தர்மாலங்கார (4) செலவிகினி சங்கிராய

3. புராதன காலத்திலிருந்தே சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை சிறப்பிடம் பெற்று விளங்கியதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி

(1) இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களின் நட்புறவான நடவடிக்கைகள்
(2) இலங்கையில் காணப்பட்ட வர்த்தகப் பொருட்கள்
(3) இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை
(4) இலங்கையின் மேற்கு, கிழக்கு கரையோரங்களில் காணப்பட்ட சிறிய துறைமுகங்கள்

4. பொலன்னறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயம்

(1) கஹபண (2) அக (3) கஹவனு (4) தம்பமஸ்ஸ

5. கி.பி 1658 இல் இரண்டாம் இராஜசிங்க மன்னனால் கண்டியில் சிறை வைக்கப்பட்ட வெளிநாட்டவர்.

(1) பாஹியன்தேரர் (2) ஜோவாவோ ரிபைரோ (3) ரொபட்நொக்ஸ் (4) ஹியுங்சாங்

6. பனாகடுவ செப்பு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்

(1) வர்த்தக சந்தை ஒன்றின் நிர்வாகம் தொடர்பானது

(2) சித்தாறும்பி புத்தாநாயக்க என்ற அதிகாரிக்கு நன்றிக் கடனாக வழங்கப்பட்ட பரிசு சலுகைகள்

(3) 4 ஆம் விஜயபாகு மன்னனுக்கு எதிராக கலகம் விளைவித்த வர்த்தகன் பற்றியது

(4) உபதிஸ்ஸகம என்ற இடத்தில் அந்தராப்பன என்ற சந்தை இருந்தது பற்றியது

7. இலங்கையின் மிக நீண்ட கல்வெட்டை பொறித்த மன்னனையும் அக் கல்வெட்டு காணப்படும் வரலாற்று நகரத்தினையும் தருகின்ற விடை

(1) 1 ஆம் விஜயபாகு, பொலன்னறுவை (2) 3 ஆம் விஜயபாகு, தம்பதெனியா

(3) கீர்த்தி ஸ்ரீ நிஸ்ஸங்கமல்லன், பொலன்னறுவை (4) 2 ஆம் பராக்கிரமபாகு, தம்பதெனியா



kalvi.lk

இலங்கையில் ஆட்சிசெய்த மன்னர்கள் கீழே ABCDE எனத் தரப்பட்டுள்ளனர். அதிலிருந்து 20 ஆம் வினாவிற்குரிய விடையைத் தெரிக.

A. தேவநம்பியதீசன; B.துட்டகைமுனு C.வசபன; D.மகாசேனன; E .1ஆம்விஜயபாகு

8. நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்து நிர்வகித்த மன்னனையும் முறையான யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவம் வழங்கிய மன்னனையும் தரும் விடை

(1) AB (2) AC (3) CB ( 4) DE

9. இலங்கையில் கி.பி 5 ஆம் நூற்றாண்டில் கட்டியெழுப்பப்பட்ட சிறந்த "நகர நிர்மாணத்" திற்கு சான்றாக விளங்கும் நகரம்

(1) அநுராதபுரம் (2) பொலன்னறுவை (3) மாகம (4) சிகிரியா

10. புராதன காலத்தில் இலங்கையில் வைத்தியத்துறை சிறப்பாகக் காணப்பட்டது என்பதற்கான சான்றாதாரங்கள் கண்டறியப்பட்ட அகழ்வு

(1) ஜேத்தவனராமய அகழ்வு
(2) ஆலாஹன பிரிவேனா அகழ்வு
(3) அபயகிரி விகாரை அகழ்வு
(4) மகாவிகாரை அகழ்வு

11. புராதன கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ள "ரூப்பதக்க" என்ற அதிகாரியின் பணி

(1) கால்வாய்களைப் புனரமைப்புச் செய்வது
(2) வரி அறவிடுவது
(3) நாணயங்களை வெளியிடுவது
(4) சூழலைப் பாதுகாப்பது

12. 1 ஆம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு உதவிய கண்டிப் பிரதானி

(1) பல்லேகம்பா பிரதானி
(2) உடகம்பா பிரதானி
(3) வீரசுந்தர பண்டார
(4) கெப்பட்டிப்பொலதிசாவ

13. கி.பி 1562 இல் முல்லேரியாவில் நடைபெற்ற யுத்தத்தினை வழிநடத்திய போர்த்துக்கேயத் தளபதி

(1) லோறன்ஸ் த அல்மேதா
(2) அபோன்சு பெரேயிரா த லசார்தா
(3) கொன்ஸ்தாந்தினு த சா
(4) பேரோ லொபேஸ் த சூ சா

14 இலங்கையில் பெயரளவு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எது?

(1) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(2) முதலாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்
(3) இரண்டாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்
(4) சோல்பரி குடியரசு யாப்புச் சீர்திருத்தம்



kalvi.lk

15. மூலப்பொருட்களையும், முடிவுப்பொருட்களையும், விநியோகிக்கும் மத்திய நிலையமாக விளங்கிய பிரித்தானிய நகரம்

(1) செவீல்ட் (2) லங்காசயர் (3) லண்டன் (4) யோக்சயர்

16. பிரித்தானியர் இந்தியாவில் அமைந்திருந்த வர்த்தக மையங்கள்

(1) பம்பாய், காரைக்கால், பத்தேவியா (2) பம்பாய், சென்னை, கல்கத்தா

(3) காரைக்கால், பாண்டிச்சேரி, சந்திரநாகூர் (4) கோவா, பத்தேவியா, சென்னை

17. 'உதயபானு' என்ற பத்திரிகையை வெளியிட்ட சமய சீர்திருத்தவாதி

(1) ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் (2) டி.பி.ஜயா

(3) ஸ்ரீசுமங்கல தேரர் (4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

18. இலங்கைக்கு சர்வயனவாக்குரிமையை வழங்கிய யாப்புச் சீர்திருத்தம்

(1) கோல்புறூக் சீர்திருத்தம் (2) குறுமக்கலம் யாப்புச் சீர்திருத்தம்

(3) டொனமூர் யாப்புச் சீர்திருத்தம் (4) சோல்பெரி யாப்புச் சீர்திருத்தம்

19. ஐக்கிய அமெரிக்கா முதலாம் உலகயுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டமைக்கான முக்கிய காரணம்

(1) ஐரோப்பிய வர்த்தகம் இல்லாமல் போகும் என ஐக்கிய அமெரிக்கா கருதியமை
(2) பேர்ள் துறைமுகத்தினை ஜப்பான் தாக்கியமை
(3) ஜேர்மன் கடற்படையினால் தனது கடற்படைத்தளம் தாக்கப்படும் என ஐக்கிய அமெரிக்கா கருதியமை
(4) அமெரிக்கர்கள் பயணம் செய்த லூசிதானியக் கப்பலை ஜேர்மனின் நீர்மூழ்கிக் கப்பல் தாக்கியமை

20. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புச் சபையிலுள்ள நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள விசேடமான அதிகாரம் என்ன?

(1) இரத்துச் செய்யும் அதிகாரம்
(2) பொதுச் செயலாளரை நியமிக்கும் அதிகாரம்
(3) பிரச்சனைக்குரிய நாடுகளுக்கு ஆயுதப்படையை அனுப்பும் அதிகாரம்
(4) இயற்கை அனர்த்தத்தின் போது மனிதாபிமான உதவிகளை வழங்கும் அதிகாரம்

(20x2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page